பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 24

வெள்ளிக்கிழமை
20 டிசெம்பர் 2024

மார்கழி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## இலங்கையர்களின் இணையப்பாவனை 61.48%

கொழும்பு, டிசெ. 20
இலங்கையர்களின் இணையப்பாவனை 61.48 வீதமாகக் காணப்படு 11

## எலிக்காய்ச்சலால் 121 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் காரணமாக, இதுவரை 121 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"எலிக்காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 121 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது பருத்தித்துறை ஆதார மருத்துவ 11



## ரொஹிங்ய அகதிகளுடன் கரையொதுங்கியது படகு!

### முள்ளிவாய்க்காலில் நேற்றுப் பரபரப்பு

முல்லைத்தீவு, டிசெ. 20
மியான்மரைச் சேர்ந்த 103 ரொஹிங்ய அகதிகளுடன் முள்ளிவாய்க்காலில் நேற்றுப் பகல் படகொன்று கரையொதுங்கியுள்ளது. அவர்களில் 25க்கும் மேற்பட்டவர்கள் சிறுவர்கள். 11

# புதிய அரசமைப்பு உடன் அவசியம்!

### பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய வலியுறுத்து

கொழும்பு, டிசெம்பர் 20
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா முன்னெடுத்த 'புரட்சிகர அரசமைப்பு' நிறைவேறாமல் போனமை நாட்டின் துரதிர்ஷ்டம். ஆதலால், தற்போதைய ஜனாதிபதி அநுரகுமாரவாவது நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கும் வகையில் புதிய அரசமைப்பை உருவாக்கவேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய வலியுறுத்தியுள்ளார். 11

## மருத்துவர்களின் ஓய்வு வயது 63

கொழும்பு, டிசெ. 20
அரச மருத்துவர்களின் ஓய்வு வயதெல்லையை 63 ஆக உயர்த்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
அமைச்சரவையின் இந்த முடிவால், டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்குள் ஓய்வு பெற இருந்தவர்கள் 63 வயதுவரை சேவையாற்றுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
இலங்கையில் 11

## சஜித்தின் சான்றிதழ்களை ஆராய்வது மிகஅவசியம்!

### அமைச்சர் நளிந்த தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 20
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் கல்வித் தகைமை தொடர்பான சான்றிதழ்களை ஆராயவேண்டும் என்று அமைச்சரவையின் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலா 11

ஜனாதிபதியின்

## பாதுகாப்புப் பிரதானியை பதவிநீக்க வேண்டுமாம்!

கொழும்பு, டிசெ. 20
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பாதுகாப்புப் பிரதானி உடன் பதவி நீக்கப்பட வேண்டும் என்று பிவிருது ஹெல உறுமயவின் தலைவரும், முன்னாள்அமைச்சருமான உதய கம்மன்பில வலியுறுத்தியுள்ளார். 11

## அரசியல் பழிவாங்கலில் ஈடுபடுகிறது அநுர அரசு

### பெரமுன கண்டுபிடிப்பு

கொழும்பு, டிசெ. 20
ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் அரசியல் பழிவாங்கலில் ஈடுபட்டு வருகின்றது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன குற்றஞ்சாட்டியுள்ளது.
முன்னாள் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு வெகுவாகக் குறைக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டியே, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அரசியல் 11



‘இவங்களை பார்லிமெண்டுக்கு அனுப்பினது உந்தப் பட்டங்களை செக் பண்ணவோ?’

யாப்பு விதிகளை மீறும் வகையிலான

## தமிழரசு மத்திய குழுவின் செயற்பாட்டைத் தடைசெய்க

### நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், டிசெ. 20
தமிழரசுக் கட்சியின் யாப்பு விதிகளை மீறிய வகையில், மத்திய குழுவால் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுகளுக்குத் தடைவிதிக்குமாறு கோரி, யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
தமிழரசுக் கட்சியின் மத்திய குழு 11

## இலங்கையின் பொறுப்புக்கூறலை அர்த்தமுள்ளதாக மாற்றுங்கள்

### கனேடிய அரசிடம் கோரிக்கை

ஒட்டாவா, டிசெ. 20
இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துமாறு கனேடிய அரசாங்கத்திடம், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.
கனேடிய வெளிவிவகார அமைச்சின் அழைப்பின் பேரில், கனடாவுக்குச் சென்றுள்ள சிறீதரன், கனேடிய வெளிவிகார அமைச்சின் இந்தோ பசுபிக் பிராந்தியங்களுக்கான 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்கா ஒப்பந்தம்



# வலுசக்தி இந்தியாவுக்கு தாரைவார்ப்பு



## குற்றஞ்சாட்டுகின்றார் விமல்

**கொழும்பு, டிசெ. 20**

**இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்த ரோஹண விஜேவீரவின் கொள்கையைப் பின்பற்றும் கட்சியின் ஆட்சியில் மின்சக்தி மற்றும் வலுசக்தித் துறைகள் அந்த நாட்டிடம் தாரைவார்க்கப்பட்டுள்ளன என்று குற்றஞ்சாட்டியுள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகசந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எட்கா ஒப்பந்தத்தின் ஊடாக எதிர்கால சந்ததியினரின் தொழில் வாய்ப்புகளை பறிப்பதற்கான சதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

தற்போது மேலதிக மின்சாரம் காணப்படுவதால் அதை இந்தியாவுக்கு விற்பனை செய்வதற்கு இது சிறந்த வாய்ப்பாகும் என்று அரசாங்கம் குறிப்பிடுகின்றது. இன்று மின்சாரம் தேவைக்கதிகமானதாக இருந்தாலும் நாடு அபிவிருத்தியடையும் போது அதைப் பயன்படுத்த முடியும். அதேவேளை, அவசர நிலைமைகளின் போது இந்தியாவிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்து கொள்வதற்கும் இந்தத் திட்டம் உதவும் என்றும் கூறப்படுகிறது. பங்களாதேஷ் அவசர நிலைமையின்போது அதானியிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்தது. பின்னர் மின் கட்டணத்தைச் செலுத்தமுடியாத நிலைமை ஏற்பட்டதால், முழு நாடும் இருளடைந்தது. இலங்கையிலும் தற்போது வலுசக்தித் துறையுடன் விளையாட ஆரம்பித்துள்ளனர். இது மிகவும் பாரதூரமானதாகும். எதிர்காலத்தில் மின்சாரத்துக்காக இந்தியாவிடம் கையேந்த வேண்டிய நிலைமை இதன் ஊடாக ஏற்படுத்தப்படவுள்ளது - என்றார். (எ-இ)

# நிலைப்பாட்டை வெளியிடுங்கள்

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, டிசெ.20

இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தம் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதம் ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சர்வதேச நாணயநிதியம் பற்றி சபையில் உரையாற்றினார். ஆனால் இந்தியப் பயணம் தொடர்பாக எதுவும் குறிப்பிடவில்லை. இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவிக்கவேண்டும். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் காலங்களில் எட்கா ஒப்பந்தத்துக்கு எதிராகவே செயற்பட்டார். இந்த ஒப்பந்தத்தின் உண்மைத் தன்மையை நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தவில்லை. இந்த நாடு வங்குரோத்து நிலையடைந்துள்ளமைக்கு மக்கள் விடுதலை முன்னணியும் பொறுப்புக் கூற வேண்டும் - என்றார். (எ-இ)

# எட்கா நன்மையே



கொழும்பு, டிசெ. 20

இந்தியா போன்ற உலகின் மிகப்பெரிய பொருளாதார சந்தையைக் கொண்டிருக்கும் நாட்டுடன் எட்கா போன்ற ஒப்பந்தத்தை செய்வது இலங்கைக்கு மிகப்பெரிய நன்மையாக அமையும் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

மிகப்பெரிய பொருளாதார சந்தையைக் கொண்டுள்ள இந்தியாவுடன் தொடர்பை ஏற்படுத்துவது சிறந்ததாக அமையும். அதில் எவ்வாறான தொழில்நுட்பங்கள் இடம்பெறும் என்பதை பேசித் தீர்மானிக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# அநுரகுமார இரட்டைவேடம்



கொழும்பு, டிசெ. 20

இலங்கையின் பொருளாதாரத்தைப் பலிகொடுக்கும் எட்கா உடன்படிக்கையை ஜே.வி.பி.யின் தலைவராக அன்று எதிர்த்த அநுரகுமார திஸாநாயக்க, இன்று ஜனாதிபதியாக பச்சைக்கொடி காட்டியுள்ளமை தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையின் பொருளாதாரத்தை இந்தியாவுக்கு பலிகொடுக்கும் எட்கா உடன்படிக்கை வேண்டாம் என்றும் எட்கா உடன்படிக்கை எவ்வளவு ஆபத்தானது என்பது பற்றியும் ஜனாதிபதி அநுரகுமாரவே தெளிவாக எடுத்துரைத்திருந்தார். அன்று எதிர்த்த எட்கா உடன்படிக்கையை இன்று ஏற்றது ஏன் என்பது பற்றி அநுரகுமார திஸாநாயக்க நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இந்திய அழுத்தங்களுக்கு பணிந்து தமது கொள்கையை ஜனாதிபதி காட்டிக்கொடுத்துவிட்டாரா?" - என்றார். (ச-44)

## இந்தியாவுடன்

# ரணிலை விடவும் அநுர நெருக்கம்



கொழும்பு, டிசெ. 20

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை காட்டிலும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுடன் மிக நெருக்கமாக செயற்படுகிறார். ரணிலின் கொள்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தும் ஜனாதிபதியை அநுர விக்கிரமசிங்க என்றே அழைக்கத் தோன்றுகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் ஏற்றுக்கொண்ட இணக்கப்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு ஏதும் அறிவிக்கவில்லை. இது கவலைக்குரியது.

இலங்கை - இந்திய கூட்டு வெளியீட்டில் பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தியாவுடன் டிஜிற்றல், மின்சக்தி மற்றும் நேரடித் தொடர்புகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் குழாய் முறைமை ஊடாக தொடர்புகளை பேணுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நாட்டின் மின்சக்தி மற்றும் எரிசக்தி துறையின் பாதுகாப்பை இல்லாதொழிக்கும் சூழல் ஏற்படுத்தப்படுகிறது. ஆகவே, இவ்விடயம் குறித்து கூடிய கவனம் செலுத்தவேண்டும் - என்றார். (ச-இ)

# இன்று பகிரங்கப்படுத்துவோம்

கொழும்பு, டிசெ.20

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்தியப் பயணம், எட்கா உடன்படிக்கை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இன்று விசேட அறிவிப்பை வெளியிடவுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

எட்கா உடன்படிக்கை, இணைப்பு, எண்ணெய் குதங்கள் உட்பட இந்திய விஜயத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் வெளிவிவகார அமைச்சர் நாளை (இன்று) ஊடக சந்திப்பொன்றை நடத்தவுள்ளார் என்றும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கூட்டணி!

கடந்த பொதுத் தேர்தலில் சிலிண்டர் கூட்டணியில் போட்டியிட்ட தரப்புகள், உள்ளூராட்சித் தேர்தலை புதியதொரு கூட்டணியின் கீழ் எதிர் கொள்ளத் திட்டமிட்டுள்ளன. (ம-44)

# அஸ்வெசுமவுக்கு இலகு வழிமுறை

யாழ்ப்பாணம், டிசெ. 20
அஸ்வெசும உதவித்தொகையை இலகுவாக பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.


இந்தக் கொடுப்பனவுகளை வங்கியில் இருந்து பெற்றுக் கொள்வதற்காக பிரதேச கிராம அலுவலர் ஊடாக தற்காலிக அடையாள அட்டை ஒன்றைப் பெற்றுக் கொள்வதன் மூலம் கொடுப்பனவுகளை இலகுவாகப் பெறமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# மனித உரிமை மீறல்கள் குவியும் முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 20

**இலங்கை மனித உரிமைகள் ஆணையகத்தில் நாளாந்தம் ஏராளமான முறைப்பாடுகள் குவிந்துவருவதாகவும் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 600 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் ஜி.புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நாளாந்தம் 60 முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறுகின்றன.
கடந்த கொரோனாத் தொற்றுக் காலத்திலிருந்து சேகரிக்கப்பட்ட சுமார் 8000 முறைப்பாடுகள் இன்னும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.
இலங்கைப் பொலிஸ், கல்வி மற்றும் சுகாதார திணைக்களங்களுக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளும் அதிகரித்துள்ளன - என்றார். (ச-இ)



# வடக்குமாகாணத்துக்கு இரு புதிய செயலர்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 20
வடக்கு மாகாணசபைக்கு இரண்டு புதிய செயலர்களுக்கான நியமனம் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனால் நேற்றுமுன்தினம் ஆளுநர் செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது. அதன்படி வடக்கு மர்காண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக பொ.குகநாதனுக்கு, சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலராக திருமதி ப.ஜெயராணிக்கும் இந்த நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ச-27)

# கசிப்பைத் தடுக்க புதிய மதுபானம்

கொழும்பு, டிசெ. 20
உடலுக்கும் உயிருக்கும் தீங்கு ஏற்படுத்தும் கசிப்புக்கு மாற்றீடாக குறைந்த விலையில் மதுபான வகையொன்றை விரைவில் சந்தைக்கு அறிமுகப்படுத்த உத்தேசித்துள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது. கசிப்புக் காரணமாக கலால் திணைக்களத்துக்கு வருடாந்தம் 30 வீதமான வருமான இழப்பு ஏற்படுகின்றது. அதனைத் தடுப்பதற்கும், பொதுமக்களை கசிப்பு பாவனையில் இருந்து மீட்பதற்குமே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
தற்போது இது தொடர்பான கலந்துரையாடல்கள் நிதியமைச்சுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கலால் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச-இ)




எல்லாம் செப்படி வித்தையெண்டு யோகர் சுவாமி எப்பவோ சொன்னது இப்பவும் அச்சொட்டா எல்லாத்துக்கும் பொருந்திப்போகுது. சில விசயங்கள் தன்ரபாட்டில நடக்குது எண்டுதான் நாங்கள் நினைக்கிறம். ஆனால் எல்லாத்துக்குப் பின்னாலையும் கனக்கச் செப்படி வித்தையள் நடக்குது. அப்பிடி வித்தைக்காரர் சொல்றபடிதான் சிலர் ஆடுகினம். எங்களுக்கு ஆடுற ஆக்கள் தான் தெரியுதே தவிர பின்னுக்கு நிக்கிறவை ஆரெண்டு தெரியிறேல. யாழ்ப்பாணத்தில இருக்கிற சில வெப்சைட்காரரை இப்ப இன்ரலிஜெண்ட் காரர் தனித்தனியாக் கூப்பிட்டுக் கதைக்கினமா. அப்பிடிக் கூப்பிடுறவை ஒருகாலத்தில இயக்கத்தில மேல்மட்டப்பொறுப்புகளில இருந்திட்டு, பிறகு அப்பிடியே ஆமியின்ர இன்ரலிஜெண்ட் பக்கமாக பல்டியடிச்ச ஆக்கள். அவையளுக்குத்தானே இப்ப காலம். கறுப்புக்கண்ணாடி வாகனங்களிலதான் அவை முந்தின ஆட்சியில திரிஞ்சவை. இப்பவும் அதே வாகனங்களில வந்துதான் வெப்சைட்காரரைச் சந்திக்கினம்.

அப்பிடி ஒரு வெப்சைட்காரரை கூப்பிட்டு, அவரின்ர வெப்சைட் பேரைச் சொல்லி 'இந்த வெப்சைட் உங்கட தானே?' எண்டு கேட்டிருக்கினம். ஆனால் அந்த வெப்சைட்டில சிக்கலான செய்தியள் எல்லாம் போடுறதால அவர் 'இல்லை, நான் செய்யிறேலை' எண்டு சொல்லியிருக்கிறார். அதுக்கு அந்த இன்ரெலிஜெண்ட்காரர் 'எல்லாம் எங்களுக்குத் தெரியும். நாங்கள் அது உங்கடையோ இல்லையோ எண்டு விசாரிக்க வரேலை. வேற ஒரு அலுவலா வந்தம்?' எண்டு சிரிச்சுக்கொண்டு சொல்லியிருக்கிறார். வெப்சைட்காரருக்கு ஒண்டுமா விளங்கேலை.

ஒண்டுமில்லை. நீங்கள் நாங்கள் சொல்லுற ஆளுக்கு ஏற்றமாதிரி, அவருக்குச் சப்போர்ட்டா செய்தியள் போடுங்கோ. அதுக்கு மாதம் அறுபதாயிரம் ரூபா புறிம்பா நாங்கள் தாறம் எண்டு சொல்லியிருக்கிறார்.

ஆர் அந்த ஆள்? வெப்சைட்காரரும் அப்பாவியாக் கேட்டிருக்கிறார். அதுக்கு இன்ரெலிஜெண்ட்காரர் சொன்ன பதிலைக் கேட்டதும் வெப்சைட்காரருக்கே அதிர்ச்சியாப் போட்டுதாம். வேற ஆர்? எல்லாம் அந்த வைத்தியக்கார எம்.பி. தானாம். வெப்சைட்காரர் 'யோசிச்சுப்போட்டு சொல்றன்' எண்டு வந்திட்டாராம். ஆனால் என்ன முடிவு எடுத்தார் எண்டு தெரியேலை.

இப்பவாவது சனங்கள் ஒண்டை விளங்கிக் கொள்ளவேணும். சிலரைச் சனம் கண்டபடி கத்துறார், தன்னைப் பேமஸாக்க இப்பிடிச் செய்யிறார், தனி ஒராளா நீதி கேக்கிறார் எண்டெல்லாம் நினைக்கினம். ஆனால் எல்லாத்துக்குப் பின்னாலையும் செப்படி வித்தையளும், வித்தைக் காரரும் இருக்கினம். எந்த அரசாங்கம் வந்தாலும் தமிழ்த் தேசியத்தை அழிக்கோணும் எண்டதில அவைக்கு ஒற்றுமை இருக்கும். எந்த மாற்றம் வந்தாலும் இந்த எண்ணம் மட்டும் அவைக்கு மாறாது. அதுக்காகத்தான் இப்பிடியான சிலரை வைச்சு அவை காரியம் பாக்கினம். எதுக்கும் கவனமா இருக்கிறது எங்களுக்கு நல்லது.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படக்கூடும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**இடபம்:** தாய் வழி உ றவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறு சிறு சங்கடங்கள், அவர்களுக் காக வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும்..சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறை வேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், வாகனத் தில் செல்லும்போது கவனம் தேவை. விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற் படும். உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்து சேரும். சிலருக்கு கோயில்களுக்குச் சென்று வேண்டுதல்களை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை வழியில் எதிர்பார்த்த தகவல் கிடைப்பது தாமதமாகும்.

**மகரம்:** இன்றைக்கு உற்சாகமாகக் காணப்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளைய சகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டு வருவார்கள். தந்தை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மாலையில் குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வருவீர்கள்.

**மீனம்:** இன்று பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். சிலருக்கு ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

## ஆனந்த அனுபவப் பயிற்சி

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின் ஆனந்த அனுபவப் பயிற்சி எதிர்வரும் 24ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ சந்திரசேகப் பிள்ளையார் திருமண மண்டபத்தில் காலை 7 மணிமுதல் 10 மணிவரை இந்த நிகழ்வுகள் முன்னெடுக்கப்படும் என்று ஏற்பட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம)

## பொதுச்சந்தையில் திருத்தல் பணிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 20

திருநெல்வேலிப் பொதுச்சந்தையில் அவசரத் திருத்தப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் இந்தத் திருத்தல் பணிகள் இடம்பெற்று வருகின்றன. நண்பகல் 12 மணி தொடக்கம் அதிகாலை 4 மணி வரை பணிகள் இடம்பெற்று வருகின்றன என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-66)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



## தர்மகுலசிங்கம் சுரேஷ்

திதி : (20.12.2024) வெள்ளிக்கிழமை

கள்ளங் கபடமற்ற எங்கள் கண்மணியே தம்பி
காலம் இரண்டுகள் கணப்பொழுதில் ஓடியதே
எம் உள்ளக் கோயிலிலே உன்நினைவுகள் தானிருக்கு
உன் உடலை விட்டு உயிரோ மாயமாய் மறைந்ததுவோ
உன் உடலை சாம்பலாக்கி மண்ணோடும்
நீரோடும் கலந்துவிட்டோம்
உன் நினைவை எம் சுவாசக் காற்றோடு கலந்துவிட்டோம்.
உன்நினைவை மறப்பதாயின் எம் சுவாசம் நின்றுவிடும்.
உன் அழகு முகம் மறக்காது
உன் நிழற்படத்தைப் பார்த்து தினம் ஏங்கித் தவிக்கின்றோம்
ஏக்கத்தை தீர்த்து உள்ளங்குளிர வைப்பாயோ.

தோற்றம்
08.02.1986

மறைவு
24.12.2021

ஏக்கத்துடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

உற்சாகமான உழைப்பு இல்லாமல் உயர்ந்த வெற்றி ஏதையுமே சாதிக்க முடியாது.


– எமர்சன் –

## பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு சாகாவரமா?

இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்று தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததார். ஆனால், அவரது கட்சி இப்போது நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைத்திருக்கும் நிலையிலும் பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னமும் நடைமுறையிலேயே இருக்கின்றது. கடந்த ஏப்ரல் மாதம் வரையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட 30 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்கின்றது சட்டமா அதிபர் திணைக்களத் தரவுகள். கடந்த ஏப்ரல் மாதத்தின் பின்னரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுகள் இடம்பெற்றிருக்கின்றன.

1979ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் காரணமாக தமிழ் மக்களே அதிகம் வதைகளை அனுபவித்திருந்தனர். இந்தச் சட்டத்தின் கீழ் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் சிறையில் அடைக்கப்பட்டு, தற்போதும் அவர்களில் சிலர் சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பியபோது, தங்கள் அடிப்படை உரிமைகளுக்காக இணைந்தபோது அதை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் அடக்கப்பட்டது. எவ்வித விசாரணைகளும் இன்றி - சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட தமிழர்கள் வழக்கு விசாரணைகள் இன்றிப் பல ஆண்டுகள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட இந்தச் சட்டம் காரணமாக இருந்தது. இந்தச் சட்டம் முற்றாக இல்லாதொழிக்கப்படவேண்டும் என்ற எதிர்ப்பு தமிழ் மக்கள் மத்தியில் பல்லாண்டுகளாக இருந்தபோதும் ஆட்சியாளர்களும், தெற்கு மக்களும் அதைக் கரிசனையில் எடுக்கவில்லை. ஆனால், இலங்கையில் நடந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை அடுத்து நாட்டின் மற்றொரு சிறுபான்மை இனமான முஸ்லிம்கள் மீது பயங்கரவாதத் தடைச்சட்டம் பாய்ந்ததன் பின்னணியிலும், தெற்கில் நடந்த அரகலய போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட பின்னரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு நாடளாவிய ரீதியில் எதிர்ப்புக் கிளம்பியது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடும்பிடியை அப்போதுதான் முழுநாடும் உணர ஆரம்பித்தது. தமிழர்கள் பல்லாண்டுகளாக அனுபவித்துவந்த கொடுமை வெளிச்சத்துக்கு வந்தது. தற்போது ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கும் அநுரகுமார திஸாநாயக்க கூட பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக இல்லாதொழிக்கவேண்டும் என்று அப்போது குரலெழுப்பியிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட அநுரகுமார திஸாநாயக்க, தங்களது அரசாங்கத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் இல்லாதொழிக்கப்படும் என்று தேர்தல் பரப்புரைக்காலத்தில் உறுதியளித்திருந்தார். ஆனால் அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுகள் நடந்திருக்கின்றன. அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவான பின்னர் ஓர் ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்திருந்த,'பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாதொழிப்பதற்கோ அல்லது அதில் மாற்றங்களைச் செய்வதற்கோ நாடாளுமன்றம் அவசியம். நாடாளுமன்றம் அமைக்கப்பட்டவுடன் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் 'என்று கூறியிருந்தார். தற்போது அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசியமக்கள் சக்தி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைத்திருக்கும் நிலையில், அவர் தனது உறுதிமொழியை நிறைவேற்றுவதற்குத் தடையேதும் இருக்கப்போவதில்லை. பயங்கரவாத தடைச் சட்டத்தின் துஷ்பிரயோகம் தற்போது இலங்கையில் நன்கு அறியப்பட்ட உண்மையாகும். அதை உணர்ந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக இல்லாதொழிக்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தேர்தலுக்கு முன்னர் ஒருவிதமாகவும், தேர்தலுக்கு பின்னர் அதற்கு நேரெதிரான வகையிலும் செயற்படுவதைப் பார்க்கும் போது, இந்த நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டம் சாகாவரம் பெற்ற சிரஞ்சீவியாகத்தான் இருக்கும் என்றே தோன்றுகின்றது. அதனை மாற்ற அநுர தலைமையிலான அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்குமா?




# கோத்தாபய ஆட்சியில் மருத்துவ மோசடி

## விசாரணைகள் ஆரம்பம்

**கொழும்பு, டிசெ. 20**

**முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் மருத்துவத்துறையில் இடம்பெற்ற மோசடி குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சமகால அரசாங்கத்தின் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

கொரோனாத் தொற்றுக் காலத்தில் தடுப்பூசிகள் மற்றும் விரைவான என்டிஜென் சோதனைக் கருவிகளின் கொள்வனவுக்காக 3.2 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இதில், 2.2 பில்லியன் ரூபா, தேசிய மருந்துகள் ஒழுங்கு முறை ஆணையத்தில் பதிவு செய்யப்படாத நிறுவனத்துக்கு செலவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த மோசடி குறித்த விவரங்கள் எதிர்காலத்தில் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ச-இ)

## பராத்தே சட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.20

சொத்துகளை ஈடு வைத்து வங்கிகளில் பெற்ற கடனை மீளச்செலுத்தாதவர்களின் சொத்துகளை ஏலத்தில் விற்கும் சட்டமான பராத்தே சட்டம் 2025 ஆம் ஆண்டு மார்ச் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். வங்கிகளுக்கும் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்களுக்குமிடையே இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-25, 6)

## வீதிகளிலுள்ளோர் விவரங்கள் திரட்டல்

குடியிருக்க வீடுகள் இன்றி வீதிகளில் வசிப்பவர்களைக் கணக்கிடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சனத்தொகை மற்றும் புள்ளிவிவரங்கள் திணைக்களம் மேற்கொண்டு வரும் சனத்தொகைக் கணக்கெடுப்பின் ஒரு கட்டமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக சுமார் 35 ஆயிரம் அரசாங்க உத்தியோகத்தர்கள் நாடளாவிய ரீதியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் சனத்தொகை மற்றும் புள்ளிவிவரங்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)




## சா/த பரீட்சை மார்ச்சில்

கொழும்பு, டிசெ. 20

2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நடைபெறும் திகதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி, 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை சாதாரண தரப்பரீட்சையை நடத்தத்தீர்மானித்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இது தொடர்பான மேலதிக தகவல்களை, 1911, 0112784208, 0112784537 மற்றும் 0112786616 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளமுடியும் என்வும் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச-இ)

## மறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 20

பாதாள உலகக் கும்பலின் தலைவரும் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரனுமான 'மிதிகம ருவன்' என்று அழைக்கப்படும் ஜயசேகர விதானகே ருவன் சாமரவை எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதிவான் தனுஜா லக்மா நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார். (ச)

## 3,000 'லைசென்ஸ்' இடைநிறுத்தம்



யாழ்ப்பாணம், டிசெ. 20

பல்வேறு குற்றச்செயல்கள் காரணமாக இந்த ஆண்டில் மட்டும் 3 ஆயிரத்துக்கு அதிகமான சாரதி அனுமதிப்பத்திரங்கள் நீதிமன்றங்களினால் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வாகன விபத்து, அலட்சியமாக வாகனம் செலுத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின் காரணமாகவே குறித்த சாரதி அனுமதிப் பத்திரங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை

சனிக்கிழமை - மார்கழி - 06

21.12.2024

சுபநேரம் : 03.24 - 04.54
ராகுகாலம் : 09.24 - 10.54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்.வி.கியூ. கற்கை நேர்முகத் தேர்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.20
யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள சான்றிதழ் தர( என்.வி.கியூ. 3 அல்லது 4) மற்றும் டிப்ளோமா தர ( என்.வி.கியூ. 5 அல்லது 6) கற்கைநெறிகளுக்கான நேர்முகத் தேர்வுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளன. மின் இலத்திரனியல், கட்டட நிர்மாணம், மோட்டார் வாகன தொழில்நுட்பம், கணக்கீடு, மொழித்துறை மற்றும் பொதுத்துறை சார்ந்த 50 க்கும் மேற்பட்ட கற்கைகளில் தரம் - 10 முதல் உயர்தரம் வரை தகைமையுடையோர் வரை கற்கமுடியும்.
கற்கவிரும்புவோர் தொழில்நுட்பக் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் நேரடியாகவோ, 0212222403, 0212222358 என்ற இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டோ அல்லது w.w.w.dtet.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாகவோ தகவல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். (ச-25)

# எலிக்காய்ச்சல் விலங்குகளுக்கும் பரவும்

*வடக்கு கால்நடை சுகாதாரத் திணைக்களம் தெரிவிப்பு*



**யாழ்ப்பாணம், டிசெ. 20**
**வடக்கு மாகாணத்தில் தற்போது பரவியுள்ள எலிக்காய்ச்சல் நோயானது மனிதர்கள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளிலும் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக வடக்கு மாகாண கால்நடை சுகாதார உற்பத்தி திணைக்களத்தின் மாகாணபணிப்பாளர் மருத்துவர் எஸ்.வசீகரன் தெரிவித்துள்ளார்.**

எலிக்காய்ச்சல் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு திருநெல்வேலியில் உள்ள கால்நடை சுகாதார உற்பத்தி திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
எலிக்காய்ச்சல் நோயானது மனிதர்கள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளிலும் ஏற்படக்கூடிய ஓர் ஆபத்தான நோயாகும். எலியின் சிறுநீர் மற்றும் மலம் மூலம் வெளியேறும் இந்த பக்ரீரியாவானது மழை காலங்களில் மழைநீர் மற்றும் வெள்ளத்தில் கலந்து அயற்புறங்களுக்கு பரவும். மழை காலங்களில் குடிநீர்க்கிணறுகளில் கூட இந்தத் தொற்றுக்கிருமிகள் கலக்கக்கூடும். இதே பக்ரீரியாக்கள் நாய், ஆடு, மாடு, பன்றி போன்ற வளர்ப்பு மிருகங்களில் கூட நோயை ஏற்படுத்திவிடும் வாய்ப்புகள் உண்டு. எனவே இந்நோய் பரவாது தடுப்பதற்கு கொதிக்க வைத்த நீரைப் பருகுதல், வெளியே போய் வந்த பின் கை, கால்களை சவர்க்காரம் இட்டு நன்கு கழுவுதல். மழை வெள்ளம் ஏற்படும் காலங்களில் கால்நடைகளை நீர் தேங்கியுள்ள பிரதேசங்களில் கட்டி வைத்தல் மற்றும் மேய்ச்சலுக்கு அனுப்புதல் ஆகிய வற்றை தவிர்த்துக்கொள்ளல் என்பவற்றைக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-125,20)

*கடற்படை மீது தாக்குதல்*

## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20
எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் நிபந்தனை அடிப்படையில் 12 இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டபோதிலும் கைது நடவடிக்கையின் போது கடற்படையினரை தாக்கிய குற்றச்சாட்டு வழக்கில் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.
எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் குறித்த மீனவர்கள் நிபந்தனை அடிப்படையில் பருத்தித்துறை நீதிமன்றினால் கடந்த நவம்பர் 27ஆம் திகதி விடுவிக்கப்பட்டிருந்தனர்.
எனினும் கடற்படையினரின் படகைச் சேதப்படுத்தி அதிலிருந்து இரண்டு கடற்படையினரைத் தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டுகள் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் குறித்த 12இந்திய மீனவர்களும் நேற்றுமுன்தினம் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.
இந்த நிலையில் குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கடற்படையின் படகுக்கு 8 லட்சம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் இழப்பீட்டை பெற்றுத்தர ஆவன செய்யுமாறும் கடற்படையினரினால் பருத்தித்துறை பொலிஸாரூடாக கோரப்பட்டது.
அதற்கமைய இது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்று அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அதுவரை மீனவர்களை எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் கிருசாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டுள்ளார். (ச-100)

## பச்சிலைப்பள்ளிக்கு நீர்க்குழாய் இணைப்பு

பளை, டிசெ. 20
தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினரால் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் நீர்க்குழாய் இணைப்பு வழங்கப்படவுள்ளது. இது தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. (ச-25, 9)




## இலஞ்ச ஊழல் விழிப்புணர்வு

கொழும்பு, டிசெ. 20
உத்தியோகத்தர்களின் திறன் விருத்தி மற்றும் நேர்மையான சேவை வழங்குதல் எனும் விடயங்களை மையப்படுத்தி சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான விழிப்புணர்வுப் பயிற்சிநெறி நேற்று வியாழக்கிழமை சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-66)

*கூ. சங்கங்களால்*

## 670 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள்

யாழ்ப்பாணம், டிசெ.20
யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆறு கிளை நிலையங்களினூடாக யாழ். பிரதேச செயலகப் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 670 குடும்பங்களுக்கு நிவாரணங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன என சங்கத்தின் தலைவர் மு.ஜெ.சுஜிந்திரன் தெரிவித்துள்ளார்.
வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உலருணவுப் பொதிகளை வழங்கும் நடவடிக்கைகள் கடந்த சனிக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இந்த உலருணவுப் பொருள்களை கொட்டடி 8 ஆம் கிளை, நாவாந்துறை 1 ஆம், 2 ஆம் கிளை நிலையங்கள், ஈச்சமோட்டை 25 ஆம் கிளை, புங்கன்குளம் 17 ஆம் கிளை, சுண்டுக்குழி 27 ஆம் கிளை ஆகிய கிளைகளில் நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
சீனி, அரிசி, மா, பருப்பு, தேயிலை, சோயாமிற் போன்ற பொருள்களே இவ்வாறு கொடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ச-45-17)



## முல்லை விவசாயிகளுக்கு இலவச உர விநியோகம்

முல்லைத்தீவு, டிசெ.20
முல்லைத்தீவு மாவட்டத்தில் உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையில் இலவச உரம் விநியோகிக்கும் பணிகள் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.
மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆர். பரணீகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மாவட்டத்தின் 11 கமநலசேவை நிலையங்களுக்குட்பட்ட 26 ஆயிரத்து 676 ஹெக்ரேயர் விவசாய செய்கை நிலங்களுக்கான 891.97 மெற்றிக் தொன் எம்.ஓ.பி. உரம் வழங்கி வைக்கப்பட்டது. (ச-25, 19)



## எலிக்காய்ச்சல் விழிப்புணர்வு

அண்மைய நாள்களாக யாழ்ப்பாணத்தில் எலிக்காய்ச்சல் பரவிவரும் நிலையில், அனர்த்தப் பிரதேச செயலக முகாமைத்துவப் பிரிவுடன் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் இணைந்து தெல்லிப்பழை விவசாயிகளுக்கும், கிராமமட்ட உத்தியோகத்தர்களுக்கும் விழிப்புணர்வூட்டும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை தெல்லிப்பழைப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் வாகனம் இந்தியா நிதியுதவி

கொழும்பு, டிசெ. 20
இலங்கைப் பொலிஸாருக்கான வாகன தேவைகளை பூர்த்தி செய்வதற்கு 300 மில்லியன் ரூபாவை மானியமாக வழங்க இந்திய அரசாங்கம் இணங்கியுள்ளது. இந்த உதவித்தொகையை பயன்படுத்தி வடக்கு மற்றும் கிழக்கு பொலிஸ் நிலையங்களின் கடமை தேவைகளுக்காக கெப் வண்டிகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# ஞானசாரருக்கு பிடியாணை

கொழும்பு, டிசெ. 20
மத அவமதிப்பு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று வழக்குக்கு முன்னிலையாகாததால் அவரை கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு நீதிவான் நீதி மன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. (ச-இ)

# கொடுப்பனவு உயர்வு

கொழும்பு, டிசெ. 20
2025 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்ப கால குழந்தை அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் முன்பள்ளிச் சிறார்களுக்கு வழங்கப்படும் காலை உணவுக் கொடுப்பனவை அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
இதன்படி, ஒரு பிள்ளைக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் 60 ரூபாவை 100 ரூபாவாக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (ச-இ)

# திடீர் விபத்து அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 20
விடுமுறைகள் மற்றும் பண்டிகை காலங்களில் திடீர் விபத்துகள் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சின் தொற்றா நோய்ப் பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் சமிதா சிறிதுங்க தெரிவித்துள்ளார்.
வீதி விபத்துகள், நீரில் மூழ்கி உயிரிழத்தல், விலங்குகள் கடித்தல் மற்றும் உணவு விஷம் காரணமாக விபத்துகள் அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ச-இ)

# வீடுடைத்துத் திருட்டு இருவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 20
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாலைப் பகுதியில் வீடுடைத்து தளபாடப் பொருள்கள் பலவற்றை திருடிய சந்தேகநபர்கள் இருவரை விளக்கமறியலில் வைக்கமல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-27)



# உப்பு இறக்குமதி

## அரசு அனுமதி

**கொழும்பு, டிசெ. 20**
**உப்பு பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக நாட்டுக்கு உப்பு இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றபோது அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.
நாட்டில் நிலவிய மோசமான கால நிலை காரணமாக 2025 ஆண்டின் முதலாம் காலாண்டில் உள்நாட்டுச் சந்தையில் வீட்டுத் தேவைகளுக்கும் மற்றும் கைத்தொழில் தேவைகளுக்கான உப்பு விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்படலாமென அவதானிக்கப்பட்டுள்ளது.
அதற்குத் தீர்வாக தயார் செய்து சந்தைக்கு விநியோகிப்பதற்கான தீர்வை வரி வீதத்துக்கமைய பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய அனுமதி வழங்குமாறு உப்பு உற்பத்தியாளர்கள், கோரிக்கை விடுத்துள்ளார்கள்.
அதற்கமைய, பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெற்றிக்தொன் உச்ச அளவுக்கு உட்பட்ட உப்பை ஜனவரி 31 திகதி அல்லது அதற்கு முன்னர் வரையறுக்கப்பட்ட இறக்குமதி செய்து சந்தைக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# சூழலுக்குத் தீங்கு 14 பேருக்கு 1,12,500 தண்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 20
வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் நடந்து கொண்ட 14 பேருக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தால் 1,12,500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.
இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான சூழ்நிலைகளை வைத்திருந்த 12 வீட்டின் உரிமையாளர்களுக்கு தலா 7500 அடிப்படையில் 90 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய சூழலை வைத்திருந்த திருமண மண்டபத்தின் முகாமையாளருக்கு 7500 தண்டப்பணமும் விதிக்கப்பட்டது.
மேலும் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் பொதுவீதியில் கழிவுப்பொருள்களை எறிந்தமை தொடர்பாக நகராட்சி மன்றத்துக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் நபர் ஒருவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 7500 தண்டப் பணம் விதிக்கப்பட்டது. மேலும் பருத்தித்துறை சிவன் கோவில் கிணற்றுக்கு அருகாமையில் செல்லும் கழிவு நீர் வாய்க்காலினுள் தனது வீட்டுக்கழிவுகளை கொட்டிச்சென்றமை தொடர்பில் தொடுக்கப்பட்ட வழக்கில் ஒருவருக்கு 7500 தண்டமும் விதிக்கப்பட்டது. (ச-26)

# பாகிஸ்தானிலிருந்து மாடுகள்

கொழும்பு, டிசெ. 20
உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் பாகிஸ்தானில் இருந்து சுக்கிலவிருத்தி சினை மாடுகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.
உயரிய தரத்திலான மரபணு இயலுமைகளைக் கொண்டுள்ள பால் மாடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக 2023 மற்றும் 2024 ஆகிய இரு ஆண்டுகளில் 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பினும், குறித்த பெறுகைச் செயன்முறையைக் கடைப்பிடிப்பதில் மேலெழுந்துள்ள பிரச்சினைகளால் தேவையான பால் மாடுகளை விநியோகிப்பதற்கு இதுவரைக்கும் இயலாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# வீடு புகுந்து கொள்ளையிட்டோர் சிலமணித்தியாலத்தில் சிக்கினர்

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, டிசெ.20
மூதாட்டி தனித்திருந்த வீட்டுக்குள் அதிகாலையில் புகுந்து 5 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை கிளிநொச்சி, திருநகர்ப் பகுதியில் நடந்துள்ளது. குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி விஜயராஜ் தலைமையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸ் குழு, அதேஇடத்தைச் சேர்ந்த இரு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளது. சந்தேக நபர்கள் இருவரும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்று தெரிவித்துள்ள பொலிஸார், சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தனர். (எ-26)




# இனவாதம் தூண்டுகிறார் கஜேந்திரகுமார்

## சீலரத்தன தேரர் கண்டுபிடிப்பு

கொழும்பு, டிசெ. 20
சமஷ்டித் தீர்வைக்கோரி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இனவாதத்தைத் தூண்ட முற்படுகின்றார். அவர் இவ்வாறு செயற்பட்டால் நாங்கள் சும்மா இருக்கமாட்டோம் என்று ஜனசத்த பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்லே சீலரத்தன தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தற்போது இனவாதத்தை பரப்பிவருகின்றார். அவர் கொழும்பில்தான் வாழ்கின்றார். கொழும்பு மக்கள் அவருக்கு துளியளவும் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. நிலைமை இவ்வாறு இருக்கையில் வடக்குக்குச் சென்று அங்குள்ள மக்களை ஏன் தவறாக வழிநடத்த வேண்டும்? அதுமட்டுமல்ல இந்தியப் பிரதமருக்கு கடிதமொன்றையும் அவர் அனுப்பியுள்ளார். சமஷ்டி முறைமைக்கு அழுத்தம் கொடுக்குமாறு அந்தக் கடிதம் ஊடாக கஜேந்திரகுமார் கோரிக்கை விடுத்துள்ளார். கஜேந்திரகுமார் இனவாதத்தைத் தூண்டினால் நாம் சும்மா இருக்கமாட்டோம். இனவாதத்தைத் தூண்டினால் நாடு முன்னேறாது - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இறைவன் திருவடி அடைந்தார்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 17 . 04 . 1931 | 11 . 12 . 2024 |

## கணபதிப்பிள்ளை ஞானசேகரம்

**(இளைப்பாறிய ஆசிரியர்)**

நெட்டிலைப்பாய் கோண்டாவிலை பிறப்பிடமாக கொண்ட, இளைப்பாறிய ஆசிரியர் திரு. கணபதிப்பிள்ளை ஞானசேகரம் அவர்கள் கடந்த 11.12.2024 புதன்கிழமை பிரித்தானியா இலண்டன் மாநகரில், எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் திருவடி அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் கடைசி மகனும், காலஞ்சென்ற சுப்பையா - இராசம்மா தம்பதியரின் மருமகனும், ஓய்வு பெற்ற ஆசிரியை மீனாம்பிகை ஞானசேகரம் அவர்களின் அன்புக் கணவரும், ஞானரூபி கருணாகரன் (Ruby's Tuition, Ilford இலண்டன், பிரித்தானியா), மாவீரன் ஞானசொரூபன் ஞானச்செல்வி சிங்கேஸ்வரன் (Senior Manager, Canadian Red Cross ஒட்டாவா, கனடா) அவர்களின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சபாபதி, கனகலட்சுமி, இரத்தினசிங்கம், மனோன்மணி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், நாகரத்தினம், செல்லம்மா, பாக்கியம் ஆகியோரின் அருமை மைத்துனரும், கருணாகரன் (ராஜன்), சிங்கேஸ்வரன் ஆகியோரின் அருமை மாமனாரும், மாதுரி, சங்கவி, வத்சலன், பானுகோபன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (21.12.2024) சனிக்கிழமை பிற்பகல் 1.00 - 4.00 வரை Om Funcral Care, I-3 Beattyville Gardens, Liford IG6 IJN என்னும் இடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (22.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 - 10.30 மணிவரை Hendon Cemetery and Crematorium, Holders Hill Road, London, NW7 INB என்னும் இடத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**


**மகள் - ரூபி கருணாகரன் - +44 7837 986604**

**மகள் - ஞானச்செல்வி சிங்கேஸ்வரன் - +1 613 716 2813**

(CS/56965) J-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 . 07 . 1952 | 18 . 12 . 2024 |

## காசிநாதர் வர்ணகுலசிங்கம் (வெள்ளை அண்ணா)

இல 21, கன்னாரலேன், நல்லூரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட காசிநாதர் வர்ணகுலசிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (18.12.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிநாதர் - கனகம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - இராசலட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகனும், தனலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், ஹேசிகா, பிரியங்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரு. தினேஷ்கரன், திரு. அரசகுமார் ஆகியோரின் மாமனாரும், திரு. பாலசுப்பிரமணியம், திருமதி தங்கபூபதி பாலேந்திரன், திரு. தியாகராஜா, திரு. மகேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (22.12.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.30 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

**இல 21, கன்னாரலேன், நல்லூர்.**

**072 442 0306 (Whats App)**

**077 691 3203**

(CS/56964) J-1

# நிமோனியா காய்ச்சலால் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், டிசெ. 20

நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குடும்பத்தலைவர் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார். ஆனைக்கோட்டை - சாவற்கட்டுப் பகுதியைச் சேர்ந்த குனலிங்கம் குணசேகரம் (வயது - 46) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இரண்டு நாள்களாகக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த அவர், இன்று அவரது வீட்டில் திடீரென மயங்கியுள்ளார். இதையடுத்து, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-26)

**புதுவருடத்தை முன்னிட்டு கோழி முட்டை மலிவு விலையில்**

**புறோயிலர், கல்பேட், பேரன்ஸ்,**
**ஊர்க்கோழிகள், குஞ்சுகள் அனைத்தும்**

- **1 Kg கல்பேட் இறைச்சி - 1000/-**
- **1 முட்டை 25/-**

**இராமநாதன் வீதி,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

**நியூ சிற்றி பாம்**
**நியூ சிற்றி கோழிக்கடை**
**இல 8, 4ம் குறுக்குத்தெரு**
**சின்னக்கடை மார்க்கற் முன்பாக,**
**குருநகர், யாழ்ப்பாணம்.**

(CS/56962) J-1

## இலங்கை பத்திரிகைப் பேரவை

**அறிவித்தல் - பத்திரிகை பதிவு செய்தல்**

1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகைப் பேரவையின் சட்டத்தின்படி, நாட்டில் வெளியிடப்படும் பத்திரிகைகள் / சஞ்சிகைகள் இலங்கை பத்திரிகைப் பேரவையில் பதிவு செய்யப்பட வேண்டும். மேலும், ஆண்டுதோறும் பதிவினைப் புதுப்பிக்கப்பட வேண்டும். அதன்படி, இதுவரைப் பதிவு செய்யப்படாத பத்திரிகைகள் / சஞ்சிகைகளைப் பதிவு செய்யும் படியும், 2025 ஆம் ஆண்டுக்காக பத்திரிகை மற்றும் சஞ்சிகைகளின் பதிவை புதுப்பிக்கும் படியும் அறிவிக்கிறேன்.

அதன்படி, பத்திரிகை பதிவு தொடர்பான விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் அல்லது இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திரிகை ஆணையாளர்,
இலங்கைப் பத்திரிகைப் பேரவை
இல.325,
பௌத்தலோக்க மாவத்தை,
கொழும்பு 07.

தொலைபேசி : 011-2693272
தொலைநகல் : 011-2693271
மின்னஞ்சல் : slpresscouncil@gmail.com
இணையத்தளம் : www.slpc.lk

பி.கு. - இலங்கை பத்திரிகைப் பேரவையில் பதிவு செய்யப்பட்ட பத்திரிகைகளுக்கு / சஞ்சிகைகளுக்கு மட்டும் சட்ட நிலையைக் கிடைக்கும்.

# 2ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 19 . 06 . 1942 | 13 . 12 . 2022 |

கண்ணுக்கு ஒளியாய்,
நெஞ்சத்தில் நினைவாய்
நிலையாய் என்றும் எங்களோடு
எங்களின் இறைவனாய் - என்றும்
எங்களை வழிநடத்த வணங்குகின்றோம்.

நீங்கா நினைவுகளுடன்
**மருமக்கள், பெறாமக்கள்**

(CS 29475) A-1

# இருபத்தைந்தாவது ஆண்டு நினைவலைகள்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 10 . 11 . 1924 | 27 . 12 . 1999 |

ஆசிரியமணி

## அமரர் நமசிவாயம் வாதவூரன்

அப்பா !

நீங்கள் எம்மை விட்டுச் சென்று ஆண்டுகள்
இருபத்தைந்து கடந்தாலும் எங்கள்
முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
என்றும் எம் கண்விட்டு மறையாது உங்கள் நினைவுகள்.

**[illegible],**
**[illegible] வடக்கு.**

**குடும்பத்தினர்**
**071 856 1625**

(CS/56967) J-1

# தடுப்பூசி

யாழ்., டிசெ. 20

யாழ்ப்பாணம் - நயினாதீவில் வளர்ப்பு நாய்கள் மற்றும் தெரு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை ஆரம்பமான நிலையில், இன்று வெள்ளிக்கிழமை இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்படவுள்ளது. எனவே, அனைவரும் தங்கள் வளர்ப்பு நாய்களுக்குத் தவறவிடாமல் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறும், பொது அமைப்பினர் தெருநாய்களுக்கான தடுப்பூசியை ஏற்றுவதற்குத் தங்களால் இயன்ற உதவியை வழங்கி ஒத்துழைப்பு வழங்குமாறும் சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளார். (ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவகற்றல்

சாவகச்சேரி, டிசெ. 20
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கல்வயல் பிரிவில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளன. குடியிருப்பாளர்கள் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளில் காணப்படும் நீர் ஏந்து பொருள்களை சேகரித்து கழிவுகளை உரப்பைகளில் கட்டி வைத்து கழிவகற்றல் வாகனத்தில் ஒப்படைக்குமாறு நகரசபையினர் அறிவித்துள்ளனர். (ச-25,9)

# கௌரவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.20
இணுவில் கலை இலக்கிய வட்டம் மற்றும் இணுவில் அறிவாலயம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், பேராசிரியர் கந்தையா ஸ்ரீகணேசனை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு, பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் கந்தசாமி ஆலயம் முன்பாகவுள்ள இணுவில் அறிவாலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது. அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-25)



# பரிசில் நிகழ்வு

சாவகச்சேரி பிரதேசசபைக்குட்பட்ட மிருசுவில் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசில் தின நிகழ்வு, சாவகச்சேரி பிரதேசசபையின் செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி சி.சுதோகுமார், சிறப்பு விருந்தினர்களாக கொடிகாமம் கிராமிய சித்த வைத்தியசாலை வைத்தியர் திருமதி றஜிதா கனகசுந்தரம், தென்மராட்சி வலயக்கல்வி நிர்வாக உத்தியோகத்தர் திருமதி கிரிசாம்பாள் பிரபாகரன், மிருசுவில் கிராம அலுவலர் அ.பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25, 159)

# யாழில் மேலும் 3 இடங்களில் வளித்தரக் கண்காணிப்பகம்!

யாழ்ப்பாணம், டிசெ. 20
யாழ்ப்பாணத்தில் மேலும் மூன்று இடங்களில் வளித்தரக் கண்காணிப்பு மையங்கள் அமைக்கப்படவுள்ளன என்று மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் உள்ள வளித்தரக் கண்காணிப்பு நிலையம் சுமார் ஒரு மாதத்துக்கும் மேலாக இயங்காத நிலையில், அதனை மீளச் செயற்படுத்துவதற்கு கொழும்பிலிருந்து நேற்று வருகை தந்திருந்த குழு திருத்தப் பணிகளை முன்னெடுத்திருந்தது.
இதைத் தொடர்ந்தே, யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ள மூன்று காற்றுத் தரக் கண்காணிப்பகங்களுக்கு மேலதிகமாக, மேலும் மூன்று காற்றுத் தரக் கண்காணிப்பகங்களை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. சாவகச்சேரியிலும், வலிகாமத்தின் இரு பகுதிகளிலும் இந்தக் கண்காணிப்பகங்கள் அமைக்கப்படவுள்ளன என்றும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
அத்துடன், யாழ்ப்பாணத்தின் காற்றுத் தரம் தொடர்பில் பல்வேறுபட்ட போலித் தகவல்கள் பேஸ்புக்கில் பரப்பப்படுகின்றன என்றும், உத்தியோகபூர்வ அறிவித்தலைப் பின்பற்றுமாறும் பொதுமக்களை மத்திய சுற்றாடல் அதிகார சபை வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளன. (ம-125)



# இராணுவத்தினரால் செயற்கை அவயங்கள் வழங்கல்

முல்லைத்தீவு, டிசெ.20
முல்லைத்தீவு, வட்டுவாகல் 59 ஆவது படைப்பிரிவினரின் ஏற்பாட்டில், அங்கவீனர்களுக்கு செயற்கை அவயங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியில் சென்ரர் போ ஹான்டிக்காப் என்ற அமைப்பின் ஒழுங்குபடுத்தலில் இராணுவத்தால் இவை வழங்கப்பட்டன. நிகழ்வில் வன்னி பாதுகாப்பு படைத்தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜே.பி.சி. பீரிஸ் ஆர்.டபிள்யூ பி ஆர்.எஸ்பி என்.டி.சி, சென்டர்போ ஹான்டிக்கப்ப அமைப்பின் இணைப்பாளர் சாந்த அத்தநாயக்க, 59 ஆவது படைப்பிரிவு உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். (ச-25, 19)



# தேவைப்பாடு ஆராய்வு

யாழ்ப்பாணம், டிசெ.20
சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் தேவைப்பாடுகள் மற்றும் மேம்பாடுகள் தொடர்பில் மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினருக்கும் வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
கலந்துரையாடலில் பிரதம செயலாளர் இ.இளங்கோவன், சுகாதார அமைச்சின் மூத்த உதவிச் செயலர் திருமதி அ.சாந்தசீலன், சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் பத்திரண, யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பதில் பொறுப்பு மருத்துவ அதிகாரி கோ.ரஜீவ், நலன்புரிச் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்றனர். (ச-25, 27,66,159)

விற்பனைக்கு
50 Kw Issue Engine - Sound Proof
விற்பனைக்கு உண்டு.
புதிது விலை - 3,400,000/-
தொடர்புகளுக்கு:-
077 218 6351, 077 568 1344
(Cs29474) J-1

இன்று 60 ஆவது அகவை காணும் எமது ஆசானுக்கு
மணிவிழா வாழ்த்துக்கள்




திருமதி ரஞ்சிதா சிறீபாலகிருஷ்ணன்
(ஆரம்பக் கல்வி ஆசிரியர்)
ஆசிரியர் சேவை - (தரம் - 1)
◆ சேவைக்காலம் - 17.08.1988 - 19.12.2024
◆ எமது பாடசாலையில் - 04.09.2018 - 19.12.2024
ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்
மீசாலை
(CS/5663) J-1

கொரோனா காலத்தில் எரிக்கப்பட்ட

# ஜனாஸாக்கள் விவரங்களை வெளியிடக்கோரும் ரிஷாத்

கொழும்பு, டிசெ.20
கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் எரிக்கப்பட்ட ஜனாஸாக்களின் பெயர் விவரங்களை சுகாதார அமைச்சர் வெளியிடவேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் கோரியுள்ளார்.
நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
சுகாதார அமைச்சர் நாடாளுமன்றத்தில் வெளியிட்ட தகவல்கள் திருப்தியானதாக இல்லை. இந்த அரசாங்கத்தில் இருக்கும் ஜனாதிபதி உள்ளிட்ட யாரும் ஜனாஸா எரிப்புக்கு ஆதரவானவர்கள் அல்லர். நூறு வீதம் அதற்கு எதிரான கொள்கையுடையவர்கள். அதனால் எரிக்கப்பட்ட ஜனாஸாக்களின் பெயர் விவரங்களை எங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். விவரங்கள் எமக்குக் கிடைத்த பின்னர் அந்த விடயங்களை நாங்கள் எதற்குக் கேட்கிறோம் என்பதை நாங்கள் தெரிவிப்போம்.
அரச அதிகாரிகள் எழுதித்தரும் விடயங்களை இங்கு வந்து வாசிப்பதுதான் கடந்த காலங்களில் இருந்துவரும் வழமை. அதனால் ஜனாஸா எரிப்பு தொடர்பான கேள்விக்கான பதிலும் சுகாதார அமைச்சில் இருக்கும் அதிகாரிகள்தான் எழுதிக் கொடுத்திருப்பார்கள்- என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ரொஹிங்ய...

சூச்சியின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து மியான்மரில் தற்போது இராணுவ ஆட்சி இடம்பெற்று வருகின்றது. பௌத்தத்தை முதன்மை மதமாகக் கொண்ட மியான்மரில் சிறுபான்மை மக்களான ரொஹிங்யர்கள் இனச் சுத்திகரிப்புச் செய்யப்பட்டு வருகின்றனர். இதனால், ஒவ்வொரு மாதமும் பல நூறு ரொஹிங்யர்கள் தமது எல்லைப் பகுதியாகத் தப்பித்து பங்களாதேஷுக்குள் தஞ்சமடைந்து வந்தனர். ஆனால், ஷேக் ஹசீனாவின் ஆட்சி வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து, பங்களாதேஷிலும் பொருளாதாரம் மிகவும் பின்னடைவான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதால், அந்த நாடும் ரொஹிங்யர்களை தற்போது ஏற்க மறுத்துள்ளது.

இதனால், மியான்மரில் இருந்து தப்பித்து அகதிகளாகக் கடல் வழியாகப் பயணம் செய்யும்போதே அவர்கள் இலங்கைக்குள் கரையொதுங்கியுள்ளனர். சுமார் 10 நாள்கள் கடற்பயணத்தை மேற்கொண்டதாக அவர்கள் விசாரணையாளர்களிடம் கூறியுள்ளனர். மீட்கப்பட்ட மியான்மர் அகதிகளுக்கு முல்லைத்தீவு மீனவர்கள் தாராளமாக உணவுப் பொருள்களை வழங்கினார்கள். அந்த உணவுப் பொருள்களை இருகரமேந்திப் பெற்றுக்கொண்ட அவர்களின் நிலைமை பரிதாபத்துக்கு உரியதாக இருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், உதவிப் பொருள்கள் வழங்கப்படுவதை ஒருங்கிணைத்துடன், கடற்பகுதிக்குப் பயணம் மேற்கொண்டு அவர்களைப் பார்வையிட்டார். மீட்கப்பட்டவர்கள் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (அ-ம-26)



## சஜித்தின்...

ளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமது கல்வித் தகைமையை வெளிப்படுத்துவதற்கு ஆளுங்கட்சியினருக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. தற்போதைய சூழ்நிலையில் தமது கல்வித் தகைமைக்குரிய சான்றிதழ்களை முன்வைக்க முடியாததால்தான் சபாநாயகராக பதவி வகித்த அசோக ரன்வல பதவி விலகினார். மாறாக அவரின் பட்டம் பற்றி பிரச்சினை இல்லை. எனவே, அவர் விரைவில் சான்றிதழ்களை முன்வைப்பார். எமது தரப்பில் உள்ள எவரும் போலித் தகவல்களை முன்வைக்கவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தமது சான்றிதழ்களை நேற்று (நேற்றுமுன்தினம்) சபையில் காண்பித்தார். நேற்று (நேற்றுமுன்தினம்) மாலைவரை ஹன்சார்ட்டுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இன்று (நேற்று) காலைவரைகூட கையளிக்கப்படவில்லை. எனவே, எதிர்க்கட்சித் தலைவர் காண்பித்த சான்றிதழ்களை ஆராயவேண்டும்' - என்றார். (அ-ம-44)

## பாதுகாப்புப்...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வாகனத்தில் இருந்து இறக்கும்போது உதவியாளர்கள் இல்லாமல், தானாகவே வாகனத்தின் கதவைத் திறந்து கொண்டு இறங்குவதாக எமது இளைஞர், யுவதிகள் சமூக வலைத்தளங்களில் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர். முக்கியஸ்தர்களின் பாதுகாப்புத் தொடர்பில் தெளிவில்லாத தரப்பினரே இத்தகைய செயலைப் பாராட்டி வருகின்றனர்.

ஆனால் முக்கியஸ்தர்களின் பாதுகாப்பு ஏற்பாடு தொடர்பில் தெரிந்து வைத்திருக்கவேண்டிய ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரதானி, ஜனாதிபதி தாமாகவே கதவைத் திறந்து கொண்டு இறங்குவதற்கு இடமளித்திருக்கக் கூடாது. அதற்கு அனுமதித்தன் மூலம், அவருக்கு முக்கியஸ்தர்களின் பாதுகாப்பு பற்றிய உரிய அனுபவம் இல்லை என்பதையே காட்டுகின்றது. எனவே, ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு பிரதானி உடன் பதவி நீக்கப்படவேண்டும். பிரதானிகள் வரும்போது கதவைத் திறந்து கொடுப்பதுகூட பாதுகாப்பு ஏற்பாடுதான். மாறாக பிரதானியால் முடியவில்லை என்பதற்காக பாதுகாப்புத் தரப்பு கதவைத் திறப்பதில்லை. வாகனத்தில் இருந்து இறங்கும்போது பிரதானிகளை தாக்குவது இலகுவானது. அதனால்தான் உரிய பாதுகாப்பு வழங்கப்படுகின்றது - என்றார். (அ-ம-44)

## புதிய...

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் உருவாக்கப்பட்ட புதிய அரசமைப்பு அன்று நிறைவேற்றப்பட்டிருந்தால், இன்று நாடு பெரியளவில் முன்னேற்றம் அடைந்திருக்கும். புதிய அரசமைப்பை உருவாக்கி தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை சந்திரிகா முன்னெடுத்தார். ஆனால், இன்று அதைப் பலரும் மறந்துள்ளனர்.

அரசமைப்புப் பேச்சுகளுக்காக 21 கூட்டங்களை சந்திரிகா நடத்தியிருக்கின்றார். அவற்றில் நானும் பங்கேற்றிருக்கின்றேன். அந்த அரசமைப்பு முயற்சிக்கு எந்தவொரு அரசியல்வாதியும் எதிர்ப்பை வெளியிடவில்லை. அன்று அந்த அரசமைப்பு நிறைவேற்றப்பட்டிருந்தால் இன்று நாடு இன்னொரு கட்டத்துக்குச் சென்றிருக்கும் என்று என்னால் உறுதியாகக் கூறமுடியும். ஆனால் அந்த முயற்சி நிறைவேறாது போனமை எமது நாட்டின் துரதிர்ஷ்டமாகும். புதிய ஜனாதிபதி தற்போதாவது அதனைச் செய்வார் என்று நம்புகின்றேன் - என்றார். (அ-ம-இ)

## தமிழரசு...

உறுப்பினரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சி.சிவமோகன், சட்டத்தரணி பெனாசி பிரதீபன் ஊடாக யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

தமிழரசுக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் வவுனியாவில் கடந்த 14ஆம் திகதி நடைபெற்றது. இதன்போது கட்சியின் தலைவர் யார் என்ற விடயத்தில் குழப்பநிலை ஏற்பட்டிருந்ததுடன், எதிர்வரும் 28ஆம் திகதி அது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே, தமிழரசுக் கட்சியின் யாப்பு விதிமுறைகளை மீறி மத்தியகுழு எடுக்கின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும், தீர்மானங்களுக்கும் தடை உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ-ம-26-110)

## மருத்துவர்களின்...

மருத்துவர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில், டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் மருத்துவர்கள் ஓய்வு பெறும்போது, மருத்துவர்கள் பற்றாக்குறை மேலும் தீவிரமாகலாம் என்று பல தரப்பினரும் சுட்டிக்காட்டியிருந்தனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே, மருத்துவர்களின் ஓய்வு வயது அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## இலங்கையர்களின்...

கின்றது என புள்ளிவிவரங்களின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19 வீதமானவர்கள் இணையத்தை அதிகம் பயன்படுத்துகின்றனர் என்றும், இணைய உபகரணங்கள் கொள்வனவுக்காக இந்த ஆண்டு 41.78 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-6)

## அரசியல்...

பழிவாங்கலில் ஈடுபடுகின்றது என்று பெரமுன தெரிவித்துள்ளது.

பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சாகர இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் மிகவும் அதிக பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள தலைவராக மஹிந்த ராஜபக்சவே காணப்படுகின்றார். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை முன்னெடுத்த அவரின் இராணுவப் பாதுகாப்பை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குழுவொன்றின் மீளாய்வின் பிரகாரமே இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது என பொதுமக்கள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

நாட்டைப் பாதுகாத்த மஹிந்த ராஜபக்சவுக்கு உள்ள அதே அளவிலான அச்சுறுத்தலா ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளது? புலிகள் மற்றும் பயங்கரவாதிகளால் மஹிந்த ராஜபக்சவுக்கு உள்ள அதே அளவான அச்சுறுத்தலா மைத்திரிபால சிறிசேனவுக்கு உள்ளது? எனவே, அரசாங்கத்தின் பாதுகாப்பு மீளாய்வு தொடர்பில் எமக்கு நம்பிக்கை இல்லை. இது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை. ஜே.வி.பி.யின் ஒரு தரப்பை திருப்திப்படுத்துவதற்காகவே இவ்வாறு மஹிந்தவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்சவுக்கு பாதுகாப்பு வழங்கிய இராணுவத்தினர் முகாம்களுக்குச் சென்றால் எப்படி செலவீனம் குறையும்? அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படத்தான் போகின்றது. அரசியல் பழிவாங்கலுக்காக வேறு யாரை வேண்டுமானாலும் தெரிவுசெய்துகொள்ளுங்கள். ஆனால் நாட்டை பாதுகாத்த தலைவரை அரசியல் பழிவாங்கலுக்கு உட்படுத்த வேண்டாம் - என்றார். (அ-ம-44)

## இலங்கையின்...

பிரதி அமைச்சர் வெல்லனை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இதன்போதே, இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவேண்டிய பொறுப்பு கனடாவுக்கு உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, 'ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசுக்கு இனியும் கால நீடிப்பும், அரசியல் வெளியும் வழங்கப்படக்கூடாது. குற்றவியல் பொறுப்புக்கூறல் தொடர்பான சர்வதேச விசாரணையை நோக்கி அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்' என்று சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் கடினமாக அணுகப்படவேண்டும் என்றும், அவை தரமுயர்த்தப்படவேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தனது எழுத்துமூல சமர்ப்பணத்தையும் முன்வைத்துள்ளார். (அ-ம-66)

## எலிக்...

மனையில் 32 பேரும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 8 பேரும் சிகிச்சைபெற்று வருகின்றனர். கடந்த 24 மணிநேரத்தில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 6 நோயாளர்களும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 5 நோயாளர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுவரை 8 ஆயிரத்து 300 பேருக்கு தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-20-26-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மும்பை

# படகு விபத்தில் 13 பேர் பலி!

புதுடில்லி, டிசெ.20
மகாராஷ்டிரா - மும்பை கடற்பகுதியில் இந்தியக் கடற்படைப் படகு ஒன்றும் பயணிகள் கப்பலொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.
உயிரிழந்தவர்களில் இந்தியக் கடற்படையைச் சேர்ந்த 3 பேரும் அடங்குவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. குறித்த கடற்படைக் கப்பல் வேகத்தைக் கட்டுப்படுத்தமுடியாமல் பயணிகள் கப்பலின் மீது மோதியதால் இந்த விபத்துச் சம்பவித்ததாக தெரிவிக்கப்படுகிறது. விபத்துக்குள்ளான பயணிகள் கப்பலில் இருந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்களை மீட்கும் பணியில் அந்நாட்டு கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.
கடற்படைக் கப்பலின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளதுடன், இது தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இதேவேளை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார். (ச-இ)

# ஞானசாரருக்கு வந்த ஞானம்

கொழும்பு, டிசெ. 20
நாட்டில் இனவாதத்தை இல்லாதொழிக்கும் ஜனாதிபதியின் திட்டத்துக்கு பொதுபலசேனா பூரண ஒத்துழைப்பு வழங்கும் என பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது-
இனவாதம் நீண்ட காலமாக இந்த நாட்டை எதிர்த்திசையில் கொண்டு சென்றுள்ளது. இதனால் மக்கள் கடும் துன்ப மடைந்திருக்கின்றனர். இதற்கு அனைவரும் பொறுப்பு. நவம்பர் மாதம் ஜனாதிபதி வெளியிட்ட கொள்கைப்பிரகடனத்துக்கு ஆதரவளிக்க வேண்டியது அனைவரதும் பொறுப்பு. இனவாதமற்ற நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இது தான் சந்தர்ப்பம். பௌத்த மதம் இனவாதத்தையும் பிரிவினை யையும் நிராகரிக்கிறது. அனைவரையும் சமனாக நடத்தும் படி தான் பௌத்தம் போதிக்கிறது.
அந்தவகையில் அனைத்து இனங்களுக்கிடையிலும் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு ஜனாதிபதியுடன் துணை நிற்போம். இனவாதமற்ற ஒரு நாட்டை கட்டியெழுப்புவது அவசியம். அதற்கு நாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்- என்றார். (ச-6)

# பிரதமரிடமும் பாடம் கற்றேன்

சஜித் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 20
பிரதமர் ஹரிணி அமரசூரிய விரிவுரையாளராக இருந்த காலப்பகுதியில் தான் அவரது வகுப்புகளில் கலந்து கொண்டு கல்வி கற்றுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
தனது கல்வித் தகைமை தொடர்பான சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.
எனது கல்வித் தகைமை தொடர்பான சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன்.
தாம் ஒருபோதும் பொய்யான சான்றிதழை சமர்ப்பிக்கவில்லை. அவ்வாறு சான்றிதழ்களை சமர்ப்பித்ததாக எவரேனும் நிரூபித்தால் அரசியலில் இருந்து விலகுகிறேன்.
எனது வெளிநாட்டுப் படிப்பிற்குப் பிறகு 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் திறந்த பல்கலைக் கழகத்தில் சேர்ந்தேன். அங்கு சுற்றுச்சூழல் அறிவியலில் முதுகலைப் பட்டம் பெற்றேன். அப்போது விரிவுரையாளராக இருந்த தற்போதைய பிரதமரின் வகுப்புகளில் கூட கலந்து கொண்டேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.20
கோப்பாய் தென்கோவை பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் விநாயகர் விரத இலட்சார்ச்சனை இடம்பெற்று வருகிறது. இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு திருவாசகம் முற்றோதல் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி மாலை 5 மணிக்கு கஜமுக சங்கார உற்சவமும் நடைபெறவுள்ளது. சைவ அடியார்களை வழிபாடுகளில் கலந்துகொள்ளுமாறு ஆலய பரிபாலத்தினர் கேட்டுள்ளனர். (ச-25)

# புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடித்தது ரஷ்யா

புற்றுநோயை முழுமையாகக் குணப்படுத்துவதற்கு மருந்தைக் கண்டுபிடித்துள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது. புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் ரஷ்யா வெற்றிகரமாகப் பயணித்துக் கொண்டிருப்பதாக ரஷ்ய அதிபர் புடின் அண்மையில் அறிவித்திருந்தார். இந்த நிலையிலேயே, புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடிக்கும் செயற்றிட்டங்கள் முழுமையடைந்துள் ளன என்றும், புற்றுநோயை நூறு வீதம் குணப்படுத்தக்கூடிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் ரஷ்ய கதிரியக்க மருத்துவ ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.
இதன்மூலம், புற்றுநோயை முற்றுமுழுதாகக் குணப்படுத்தக்கூடிய மருந்தைக் கண்டுபிடித்த முதலாவது நாடாக ரஷ்யா தன்னைப் பதிவுசெய்துள்ளது. அத்துடன், 2025ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்குள் இந்த மருந்து பொதுமக்களின் பயன்பாட்டுக்காக வழங்கப்படவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடிக்கும் செயற்றிட்டத்தில், செயற்கை நுண்ணறிவு அதிகளவில் பயன்படுத்தப்பட்டதாகவும், சாத்தியப்படும் நேரத்தில் அந்தச் செயன்முறைகள் சர்வதேசத்துடன் பகிரங்கப்படுத்தப்படும் என்றும் ரஷ்யா மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம- இ)

வேலை வாய்ப்பு
தீவகப்பகுதியில் இயங்கிவரும் பலசரக்கு வியாபார நிலையத்திற்கு ஊழியர்கள் தேவை
1. விற்பனையாளர் 2. சிட்டை தயாரிப்பாளர் 3. உதவியாளர்
வயது எல்லை-18 தொடக்கம் 60 வயது-ஆண்கள் மட்டும். முன் அனுபவம் இருப்பின் நன்று. உணவு தங்குமிட வசதி மற்றும் நல்ல சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 230 4713





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.12. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org